10 மார்ச் 2024
தவக்காலம் 4 ஆம் ஞாயிறு
மகிழ்ச்சியின் ஞாயிறு

NEW WAY OF BEING CHURCH

newbec

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)

மாதாந்திர கருப்பொருள்

திருஅவையாக பாஸ்கா மறைபொருளை வாழ்தல்

# கடவுளின் நன்மைத்தனம் நம் வழியாக ஒளிர்கிறது

மகிழ்ச்சியின் ஞாயிறு - லாடரே ஞாயிறு நாம் தொடர்ந்து தவக்கால முயற்சிகளில் ஈடுபட உத்வேகத்தை அளிக்கிறது. இன்றைய வாசகங்களின் வழியாக, ஆண்டவர் நமக்கு என்ன கற்பிக்கிறார் என்பதைப் பார்ப்போம்.



முதல் வாசகம் குறிப்பேடு 2 ஆம் புத்தகம் ஒரு துயரமான காட்சியைக் காட்டுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் ஆண்டவருக்கு எதிராக குற்றம் இழைக்கின்றனர். அனைத்து வகையான கொடூரமான செயல்களைச் செய்தார்கள். கடவுளின் தூதர்களின் எச்சரிக்கையைப் புறக்கணித்து இறைவாக்கினர்களை ஏளனம் செய்தார்கள். கடவுளின் இல்லம், அரண்மனைகள், இடங்கள் மக்கள் ஆகிய அனைத்தின் மீதும் தண்டனை விழுந்தது. தப்பிப் பிழைத்தவர்கள் பாபிலோனுக்கு நாடுகடத்தப்பட்டார்கள். நாடுகடத்தப்பட்ட மக்கள் புலம்பினார்கள். நீரோடைகள் அருகே அமர்ந்து அழுதனர். பல ஆண்டுகளுக்குப் பிறகு கடவுள் அவர்களை விடுவிக்க பாரசீக மன்னன் சைரசை அனுப்பினார். அவர்களின் கோவிலையையும் வாழ்க்கையையும் மீண்டும் கட்டியெழுப்ப மக்களை அனுப்பினார். அனைத்தையும் நேர்ப்படுத்த இரண்டாவது வாய்ப்பு அவர்களுக்குக் கிடைத்தது.

இன்றைய நற்செய்தி குறிப்பிடுவது: யோவான் 3:16 - தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும்பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார். சைரசு மன்னன் அடிமையாகக் கொண்டுவந்த மக்களை விடுவிக்கும் ஒரு பணியை மேற்கொண்டான். ஆனால் இயேசு அனைவருக்காகவும் வந்தார் என்று நற்செய்தி கூறுகிறது. மீட்பின் திட்டத்தில் கடவுள் கொண்டிருந்த திட்டத்தை இயேசு நிக்கோதேமிடம் விளக்குகிறார். பாலைநிலத்தில் மோசேயால் பாம்பு உயர்த்தப்பட்டது போல மானிடமகனும் உயர்த்தப்பட வேண்டும் மனுமகன் உயர்த்தப்பட்டு, தந்தையின் மாட்சியில் நுழைய தன்னை சிலுவைச் சாவுக்கு தயாரிக்கின்றார்.

கடவுளின் அன்பை ஏற்றுக்கொள்ள நாம் தயாரா? குற்றங்களின் காரணமாய் இறந்தவர்களாயிருந்த நாம் அவரின் அன்பின் மூலம் இணைந்து உயிர்பெற்றோம். அவரின் அருளால் நாம் மீட்கப்பட்டோம் என்று புனித பவுல் கூறுகிறார். கடவுள் நம்மிடம் கேட்பதெல்லாம் உண்மையில் வாழவேண்டும் என்பது தான். இருளிலிருந்து ஒளியை நோக்கி நடக்கவேண்டும். இவ்வாறு நாம் வாழ்ந்தால் கடவுளின் நன்மைத்தனம் நம்மில் நம் வழியாக ஒளிரும். இதனால் நாம் மண்ணுலகிற்கு உப்பாகவும் உலகிற்கு ஒளியாகவும் திகழ்வோம். சைரசைப் போல, மோசேவைப் போல மக்களை இருளில் இருந்து ஒளிக்கு கொண்டுவரும் கடவுளின் கருவிகளாக நம்மால் திகழமுடியும்.

மகிழுங்கள். இன்று மகிழ்ச்சியின் ஞாயிறு. தவக்கால கடமைகளான இறைவேண்டல், உண்ணாநோன்பு, மற்றும் தர்மகாரியங்களைத் மகிழ்ச்சியோடு தொடர்ந்து செய்வோம். ✣

**புனித நற்குணங்களில் முன்னேறுவதற்கான உண்மையான வழி, புனிதமான மகிழ்ச்சியில் நிலைத்திருப்பதே**

– புனித பிலிப் நேரி




### இன்றைய இறைவார்த்தை:

2 குறிப்பேடு 36: 14-16, 19-23

திருப்பாடல்: 137: 1-6

எபேசியர் 2: 4-10

யோவான் 3: 14-21

INTERNAL CIRCULATION ONLY
BUL 10/2024

Published by: Archdiocesan Pastoral Institute (API) | Email: api@archkl.org